**தேசிய சிறுவர் அபிவிருத்தி நிதியம் - 2013**

------------------------------------------------------------------------------------

தேசிய சிறுவர் அபிவிருத்தி நிதியத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கணக்கு மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மேற்குறித்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

------------------------------------------------------------------------------------

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

-----------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

**1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

------------------------------------------------------------------------------------

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சிறுவர் அபிவிருத்தி நிதியத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசோட்டத்தினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிலையான வைப்பிற்காக 2013 திசெம்பர் மாதத்தின் போது கிடைக்கப்பெற்ற வட்டி ரூபா 75,000 வருமானமாக இனங்காணப்பட்ட போதிலும் காசேட்டில் சீராக்கப்படுவதற்குப் பதிலாக பெறவேண்டிய வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) வங்கிக் கணக்கிணக்கக்கூற்றில் இனங்காணப்படாத பெறுவனவுகளான ரூபா 196,362 தொகை இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) | தேசிய சிறுவர் அபிவிருத்தி நிதியத்தின் வழிகாட்டிக் கோவையின் 11.1 ஆம் பந்தி | நிதியத்தை கட்டுப்படுத்தல், அமைச்சுகளுக்கிடையேயான கண்காணிப்புக் குழுவின் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் ஆகக் குறைந்தது ஒரு மாதத்திற்கு ஒரு தடவை அக் குழு கூட்டப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது ஒரு தடவையேனும் குழு கூடியிருக்கவில்லை. |
| (ஆ) | 2006 திசெம்பர் 22 ஆம் திகதிய பீஎப்/423 ஆம் இலக்க பொதுநிதிச் சுற்றறிக்கையின் 4.4(அ) ஆம் பந்தி | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையும் நிதியத்தின் வருடாந்த நிதிக்கூற்றுக்களும் நிதியாண்டு பூர்த்தியடைந்து 05 மாதங்களுக்குள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கபட வேண்டிய போதிலும் 2010, 2011 ஆம் 2012 ஆம் ஆண்டுகளின் போது அவ் அறிக்கைகள் அவையில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதியத்தின் செயற்பாடுகளின் விளைவு ரூபா 689,129 மிகையானதுடன் இதற்கு மாறாக முன்னைய ஆண்டில் ரூபா 244,244 பற்றாக்குறையானமையால் நிதிவிளைவுகளில் ரூபா 933,373 தொகையான முன்னேற்றம் காணப்பட்டது. அம் முன்னேற்றத்திற்காக மீளாய்வாண்டின் போது கிடைக்கப்பெற்ற ரூபா 1,138,900 தொகையான நன்கொடைத் தொகை முக்கியமாகத் தாக்கமளித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதியத்தின் முக்கிய வருமான மார்க்கம் சிறுவர் தினக் கொடி விற்பனையானதுடன் மீளாய்வாண்டின் உலக சிறுவர் தினக் கொடி விற்பனைக்காக 22 மாவட்டச் செயலகங்களுக்கும் 297 பிரதேச செயலகங்களுக்கும் 740,850 கொடிகள் ரூபா 54,230 தபால் கட்டணம் செலுத்தப்பட்டு அனுப்பிவைக்கப்பட்டிருந்தன. இக் கொடி விற்பனையின் மூலம் பெறப்பட்ட தொகையில் 75 சதவீதமான பணத்தொகை 2013 நவம்பர் 30 ஆம் திகதிக்கு முன்னர் சிறுவர் அபிவிருத்தி நிதியத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டிய போதிலும் 2013 திசெம்பர் 31 வரையிலும் 28 பிரதேச செயலகங்களிலிருந்தும் ஒரு மாவட்டச் செயலகத்திலிருந்தும் மாத்திரமே பணம் அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. 2014 மே 10 ஆம் திகதி வரையில் 519,300 கொடிகள் அனுப்பிவைக்கப்பட்ட 221 மாவட்ட/ பிரதேச செயலகங்களில் இருந்து பணம் அனுப்பிவைக்கப்பட்டிராமையால் கொடி விற்பனை தொடர்பாக முறையான நடைமுறை அறிமுகப்படுத்தப்பட்டிராமை கண்டறியப்பட்டது.

(ஆ) டாக்காவில் உள்ள இலங்கை உயர் ஸ்தானிகராலயத்தில் கடமையாற்றும் சேவா வனிதாப் பிரிவு சிறுவர் அபிவிருத்தி நிதியத்திற்கு மீளாய்வாண்டின் போது ரூபா 1,138,900 தொகையை வழங்கியிருந்த போதிலும் அத் தொகையைப் பயன்பாட்டிற்கு எடுக்கப்படுவது தொடர்பாக ஆண்டின் போது எவ்வித நிகழ்ச்சித்திட்டமும் அமுலாக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.2 இனங்காணப்பட்ட நட்டங்கள்

கொடி விற்பனையிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 6,040 தொகையான காசோலை மதிப்பிழந்திருந்ததுடன் அப் பணம் மீளப்பெறப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 செயல் நடவடிக்கைத்திட்டம்

மீளாய்வாண்டிற்காக செயல்நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிராமையால் மீளாய்வாண்டின் போது அடைந்துகொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோள்கள் மற்றும் உள்ளபடியான அடைந்து கொள்ளல் தொடர்பான மதிப்பீடொன்றை மேற்கொள்ள முடியாதிருந்தது.

**5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு**

---

மீளாய்வாண்டின் போது பாதீடிடப்பட்ட வருமானமும் செலவினமும் உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினத்துடன் ஒப்பிடப்படுகையில் 50 சதவீதத்திற்கும் 100 சதவீதத்திற்கும் இடைப்பட்ட முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

---

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அமைச்சுச் செயலாளருக்கு அவ்வப்போது அறிவிக்கப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமானச் சேகரிப்பு